

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (15.11.2024) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பேருந்து போக்குவரத்து சாலை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது மற்றும் புதிய மேம்பாலங்கள் அமைப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், ப.சிவகுமார் (எ) தாயகம் கவி, ஆர்.டி.சேகர், த.வேலு, இ.பரந்தாமன், ஜெ.கருணாநிதி, டாக்டர் நா.எழிலன், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கே.பி.சங்கர், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி சென்னைக்கு அருகாமையில் சர்வதேச தரத்திலான விளையாட்டு நகரம் (GLOBAL SPORTS CITY) அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.11.2024) துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.மணிவாசன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா,பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன்,சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, நிதித்துறை செயலாளர் (செலவினம்) எஸ்.நாகராஜன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்.நந்தகுமார், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்ஜெ.மேகநாதரெட்டி,டேபிள் டென்னிஸ் ஒலிம்பிக் வீரர் சரத் கமல், இந்திய அலைச்சறுக்கு(SURFING) கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.11.2024) ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம், இளைஞர் விவகாரம் & விளையாட்டு அமைச்சகம், தமிழ்நாடு மை பாரத் நேரு யுவகேந்திரா மற்றும் தனியார் கல்லூரி இணைந்து நடத்திய காஷ்மீர் இளைஞர் கலை, பண்பாடு, சுலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற காஷ்மீர் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் சந்தித்து அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து கொண்டனர். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மை பாரத் நேரு யுவகேந்திரா மாநில இயக்குநர் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கம் மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPA) சார்பில் பாரா பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்ச.அருண்ராஜ் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# நவ. 27 முதல் ஒரு மாதத்திற்கு துணை முதல்வர் பிறந்தநாள் கொண்டாட்டம்!

சிவகங்கை, நவ.17-

சிவகங்கை மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் காரைக்குடியில் உள்ள மாவட்ட கழக அலுவலகமான தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகை

## மாவட்ட இளைஞர் அணி தீர்மானம்!

யில், பசும்பொன் தா. கிருட்டிணனன் அரங்கத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமை ஏற்று இளைஞர் அணியினர் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். முன்னாள் அமைச்சர்மு.தென்னவன் முன்னிலை வகித்தார் .

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் இளைஞர் அணி செயல்பாடு குறித்தும் வருகிற 27ஆம் தேதி கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாடுவது குறித்து விளக்கமாக பேசினார் .

இந்த கூட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர்கள்ஆர். சேதுபதி ராஜா, பரணிக்கிட்டு, கே .எம் .பொற்கோ , கார்த்தி, மதிவாணன், மகாவீர் , காரைக்குடி மாநகர செயலாளர் என்.குணசேகரன் உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டது. 1.வருகிற 2 7ஆம் தேதி முதல் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்குவது, இளைஞர்களுக்கான பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது கழகத் தலைவர் முதல்வரின் திராவிட மாடல்ஆட்சியின் பொற்கால சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டங்கள் நடத்துவது உட்பட பல்வேறு வகையில் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப் பட்டது. 2.2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் ஆணையின்படி இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்கள் கட்டளையின்படி 200 தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் வெற்றிக்கு அயராது பணியாற்றிடவும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் வெற்றிக்கு தீவிரமாக பணியாற்றுவது என்றும் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. 3.இம்மாதம் 16, 17 ,23, 24 ஆகிய தேதியில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில் இளைஞர் அணியினர் தீவிரமாக பங்கேற்று பணியாற்றுவது என்றுதீர்மானிக்கப்பட்டது.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!






தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகின்ற சிறப்பு முகாமினை தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளில் நடைபெறும் சிறப்பு முகாமினை மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம். எம்.எல். ஏ, பார்வையிட்டார். அதில் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பார்த்திபனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் நடைபெற்ற சிறப்பு முகாமினை மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கத்துடன் இணைந்து பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், மற்றும் தொகுதி பொறுப்பாளரும், மாநில விவசாய அணி துணைச் செயலாளருமான கொடி ராஜேந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, இளைஞரணி துணை அமைப்பாளர் சன் சம்பத், நகர் கழக செயலாளர் உட்பட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கையில்71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

# 1483 பயனாளிகளுக்கு 11 கோடி கடன் உதவி!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கினார்

சிவகங்கை, நவ. 17-

சிவகங்கை மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் 71 வது சிவகங்கையில் அனைத்திந்திய 71வது கூட்டுறவு வார விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ். மாங்குடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது .மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் திருமதி உமா மகேஸ்வரி வரவேற்றுப் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் 1483 பயனாளிகளுக்கு ருபாய் 10கோடியே 52 லட்சம் மதிப்பிலான பல்வேறு வகையிலான கடன்களை வழங்கி சிறப்புரையாற்றிய. தாவது.

நாடு முழுவதும் 14ம்தேதி முதல் 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்று வருகின்றது .முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் திருவள்ளூர் மாவட்டத்தில் திமூர் என்ற ஊரில் கூட்டுறவு சங்கம் துவங்கப்பட்டது .70 ஆண்டுகளாக இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகின்றது .தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்கள் கூட்டுறவுத்துறைக்கு தணிக் கவனம் செலுத்தி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் 13 88.81 மதிப்பிலான பல்வேறு வகையிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ருபாய் ஒரு லட்சம் வரை கடன் வழங்க வேண்டும் என்று திட்டமிட்டு இதுவரை கூட்டுறவுத் துறை பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் 87 828 உறுப்பினர்களுக்கு ருபாய் 530 15 கோடி பயிர் கடன்கள், 33 904 பயனாளிகளுக்கு 178.63 வகையிலான நகைகடன்கள், 3.86.809 உறுப்பினர்களுக்கு ருபாய் 2623.52 வகையிலான நகை கடன்கள் 391 சுய மகளிர் குழுக்களுக்கு ருபாய் 278.56 நிதி உதவிகள் மற்றும் பல்வேறுவிதமான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றது.இந்த கடன்களுக்குஆண்களுக்கு 5% மும், பெண்களுக்கு 4 சத வட்டியும் பெறப்படுகிறது. 7கூட்டுறவு மருந்தகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் 12 முதல்வர் மருந்தகங்கள் அமைக்க பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றது.

சிவகங்கை மாவட்டத்தில் புதிதாக சூசையப்பர் பட்டினம், முனைவென்றி, முத்துப்பட்டி, சிறாவயல்,கொம்புக்காரனேந்தல்,மழவராயனேந்தல்உட்பட 7 ஊர்களில் கூட்டுறவு சங்கங்கள் துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.1410 கடன் தாரர்கள் வட்டிசலுகை பெற்றுள்ளார்கள்.அகில இந்திய அளவில் கூட்டுறவு சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டுறவு மாநாடு வருகிற 25முதல் 30ம்தேதி வரை நடைபெற உள்ளது .

இன்று இந்த நிகழ்ச்சியின் மூலம் 14 83 பயனாளிகளுக்கு ரூபாய் 10 கோடி 52 மதிப்பிலான பல்வேறு கடன்கள் வழங்கப்பட உள்ளது.தமிழக கூட்டுறவுத் துறை இந்தியாவிலேயே சிறப்பாக செயல்படுவதில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளது. தொடர்ந்து விவசாயிகளுக்கும் , பொதுமக்களுக்கு கூட்டுறவு துறை மூலம் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் தொடர்ந்து சேவையாற்றி வரும் கூட்டுறவு துறையை விவசாயிகளும் பொதுமக்களும் சிறப்பான முறையில் ஆதரித்து பயன்பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். விழாவில் கூட்டுறவு துறை சார்பில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்ற 26 மாணவ மாணவிகளை பாராட்டி சான்றிதழ்களையும், சிறப்பாக பணிபுரிந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம். துரை.ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன், சிவகங்கை நகர் மன்ற துணைத் தலைவர் எம்.கார்கண்ணன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிப்பட்டி தனியார் திருமண மண்டபத்தில் இளைஞர் அணி சமூக வலைத் தளப் பயிற்சி தேனி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் கம்பம் சட்டமன்ற உறுப்பினருமான கம்பம் ராமகிருஷ்ணன் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் இளைஞரணி மாநில துணை செயலாளர் ஜி. பி .ராஜா கலந்து கொண்டார். இதில் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், விளையாட்டு மேம்பாட்டு மாவட்ட துணை அமைப்பாளர் சேதுராஜா, கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மதகு பட்டியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியினை மேயர் எஸ். முத்துதுரை, சிவகங்கை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் க.சண்முகம் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.உடன் சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம், மாமன்ற உறுப்பினர் சொ.கண்ணன், ஜான் கென்னடி மற்றும் பாகமுகவர்கள் உள்ளனர்.